**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**ஜூலை – ஆகஸ்டு 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* (10x1 = 10)

1. இந்திய நாட்டு கொடியின் நடுவில் உள்ள சக்கரத்தின் பெயர் என்ன?
2. ஏட்டில் எழுதாத கதைகள் எவை?
3. மரகதவர்மன் எந்த நாட்டை ஆண்டு வந்தான்?
4. ஔகாரக் குறுக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.
5. உழவர்கள் உழவு செய்யாமலேயே விளைபவை எவை?
6. திருக்குறள் எத்தனை குறட்பாக்களைக் கொண்டது?
7. நாவாய் என்பதன் பொருள் என்ன?
8. சித்தன்னவாசலில் உள்ள ஓவியங்களில் பெரியது எது?
9. பொருள்களை ஏற்றிச் செல்லும் தொடர்வண்டியை என்னவென்று அழைக்கின்றனர்?
10. செய்யுள் வடிவில் தமிழில் தோன்றிய நாடக நூல் எது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. பழமொழி – பெயர் காரணம் கூறுக.
2. இறைவன் காட்சி தருவதை விவரி.
3. சிவன் அசுரர்களின் என்னென்ன கோட்டைகளை அழித்தார்?
4. பண்புப்பெயர் என்பது யாது? அதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக।
5. மூவகை மொழிகளை எழுதுக.
6. தாராசுரனின் மூன்று புதல்வர்கள் யாவர்?
7. பாரதியார் பணியாற்றிய இதழ்கள் யாவை?
8. மன்னன் சிரிக்கின்ற போது எப்படி இருக்கும்?

9. வழுவமைதி என்றால் என்ன?
10. வாழும் உயிர்களுக்கு ஊதியம் ஆவது எது?
11. பெரியாரைப் பற்றி அண்ணா கூறுவன யாவை?
12. முத்தமிழ் விளக்கம் தருக.
13. குறுக்கங்கள் எவை?
14. இடவாகு பெயரை விளக்கி உதாரணம் தருக.
15. ஏழடிப்பட்டம் என்பது எது?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. கம்பர் – குறிப்பு வரைக .
2. வைக்கம் போராட்டம் குறித்து எழுதுக.
3. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
4. கலிங்கத்துபரணி பாடலின் கருத்தினை எழுதுக.
5. பாரதியாரின் முரசு நூல் குறித்த அறிமுகத்தை எழுதுக.
6. பெரும்பொழுதுகள் ஆறினை எழுதுக.
7. பருத்திப் பூவே சிறந்தது என்று அமைச்சர் நலம்விரும்பி கூறிய காரணம் என்ன?
8. தாமரைக்குளம் ஓவியம் பற்றி எழுதுக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. சித்தன்னவாசல் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் விவரி.
3. தொடர்வண்டி உருவான கதையும் அதன் பயணத்தைத் பற்றியும் உன் சொந்த நடையில் எழுது.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. உவமைக் கவிஞர் சுரதா பற்றி குறிப்பு எழுதி , அவர் கூறிய இன்பம் எனும் பாடலின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

2. புணர்ச்சியின் வகைகளை விளக்கி உதாரணம் தருக.

*****